**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 111/2023**

**வாதி தரப்பு சாட்சி–1 ஸ்ரீதரன் – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 09.02.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:</u>**

1) என்னிடம் காட்டப்படும் வழக்கு நான் தாக்கல் செய்ததா என்றால் எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது. என்னிடம் காட்டப்படும் வழக்குரையில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தெரியாது என்றால் சரிதான். இவ்வழக்கை பிரதிவாதி எனக்கு தெரியாமல் தாவா சொத்தை வாங்கியதால் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி எனக்கு எதிராக தாவா சொத்தை காலி செய்ய வேண்டும் என RLTOP 02/2024 மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி மனுவில் நான் வாடகை செலுத்தவில்லை என்றும், தனது சொந்த உபயோகத்திற்காக தாவா சொத்து தேவைப்படுவதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கை நான் நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். சட்ட ரீதியாக தாவா சொத்தில் இருந்து என்னை வெளியேற்ற ஆட்சேபனை உள்ளதா என்றால் உள்ளது. நான் வழக்கின் விபரம் எதுவும் தெரியாமல் வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல.

2) சட்டப்படி என்னை தாவா சொத்தில் இருந்து வெளியேற்ற நான் ஆட்சேபனை செய்ய முடியாது என்றும், வேண்டுமென்றே தாவா சொத்தை காலி செய்யக்கூடாது என்பதற்காக முரண்பாடாக வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி முறையாக சட்ட நடவடிக்கை எடுத்து RLTOP 02/2024 மனு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கை தாக்கல் செய்தற்கு முன்பு எனக்கும், பிரதிவாதிக்கும் இடையே ஏதாவது பிரச்சினை இருந்ததா என்றால் இருந்தது. மேற்படி பிரச்சினை தொடர்பாக நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா

என்றால் இல்லை.  வழக்கறிஞர் அறிவிப்பு ஏதாவது கொடுத்தேனா என்றால் இல்லை.  வழக்குரையில் சொல்லியுள்ளது போல பிரதிவாதி எந்த பிரச்சினையும் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யான வழக்குமூலத்தை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்த வழக்கு பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**